ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2023

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

செலவினத் தலைப்பு 110 மற்றும் 228

உள்ளடக்கம்

			பக்கம்
அத்தியாயம் 01	–	நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு	05
அத்தியாயம் 02	–	முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்	13
அத்தியாயம் 03	–	வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை	30
அத்தியாயம் 04	–	செயலாற்றுகை சுட்டிகள்	83
அத்தியாயம் 05	–	பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை *(SDG)* அடையும் செயலாற்றுகை	87
அத்தியாயம் 06	–	மனித வள விபரம்	95
அத்தியாயம் 07	–	இணக்க அறிக்கை	101

அத்தியாயம் 01 – நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1. அறிமுகம்

நாட்டின் சட்டத்துறை மற்றும் நீதிமன்றத் துறையின் பொறுப்புக்களை வகிக்கும் பல திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களைக் கொண்டு இவ்வமைச்சு தாபிக்கப்பட்டுள்ளது. அதன்படி காலத்துக்குக் காலம் அமைச்சின் விடயப் பொருளில் மாற்றம் ஏற்பட்டாலும் சட்ட மறுசீரமைப்பிலும், பொதுமக்களின் நீதி நிருவாக பொறிமுறைக்காக வசதிகளை ஏற்படுத்துவதிலும் முன்னேறு நிறுவனமாக இவ்வமைச்சு, ஆரம்பம் முதல் இதுவரை தொழிற்படுகிறது. குறிப்பாக இவ்வமைச்சின் விசேடித்த தன்மையாவது 110 மற்றும் 228 என இரு செலவின தலைப்புக்களினதும் பொறுப்பு பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு உரித்தாக்கப்பட்டிருப்பதே ஆகும்.

குற்றவாளிகளுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு மற்றும் பிரசைகளின் குடியியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உதவுகின்ற பிரதான சட்டங்கள் உள்ளிட்ட முக்கியமான பல சட்டங்களின் பொறுப்பு இவ்வமைச்சின் விடயப் பொருளைச் சேர்ந்துள்ளது. அதன்படி அச்சட்டங்களை காலத்திற்கேற்றவாறு மற்றும் சமுதாய தேவைப்பாடுகளின்படி திருத்தஞ் செய்வதும், புதிய சட்டங்களை அறிமுகம் செய்வதும் இவ்வமைச்சினால் செய்யப்படுகிறது. இதற்கு மேலதிகமாக இவ்வமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற சட்டமா அதிபர் திணைக்களத்தினால் பிற நிறுவனங்களுக்குரிய விடயப்பொருள்களின் சட்டங்களைத் திருத்தஞ் செய்வதற்காக பாரியதொரு செயற்பாடு மூலம் சட்டவாக்கச் சான்றிதழ் மற்றும் அறிவுரைகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் சட்டவரைஞர் திணைக்களத்தின் மூலம் வரைவுகளை தயார் செய்து கொடுத்தல் என்பன செய்யப்படுகிறது.

நீதி நிருவாகத்திற்கான வசதிகளை வழங்குதலும் நீதிமன்றத்தின் சுயாதீனத்தை பாதுகாப்பதும் அமைச்சின் தலையாய பொறுப்பாகும். நீதிமன்ற நிருவாகத்திற்காக அமைச்சினால் எப்பொழுதும் பூரண ஒத்துழைப்பு நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படுகிறது. வர்த்தமானி பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள 34 நீதிமன்ற வலயங்களில் உள்ள 225 நீதிமன்றங்கள் மற்றும் 39 தொழில் நியாய சபைகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் பணிகள் அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி நீதிமன்றக் கட்டடங்களின் பேணல், நவீனமயப்படுத்தல் மற்றும் தேவைக்கேற்ப புதிய கட்டடங்களை நிர்மாணித்தல் ஆகிய பணிகளும் செய்யப்படுகின்றன. அத்துடன் நீதிபதிகளுக்கு சுயாதீனமாக மற்றும் மதிப்புடன் தமது கடமைகளை நிறைவேற்றுவதற்காக தகுதியான வதிவிட வசதிகளை வழங்குதல், நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலங்களை நிர்மாணித்தல் மற்றும் பேணுதல் பணிகளும் செய்யப்படுகின்றன. அத்துடன் அவர்களினது தொலைத்தொடர்பு மற்றும் போக்குவரத்து வசதிகளை உரியவாறு வழங்கும் பணியும் அமைச்சினால் செய்யப்படுகிறது.

நீதிமன்ற முறைமையினுள் நீதி நிருவாகத்தின் தாமதங்களைத் தவிர்த்துக்கொள்ளல் இவ்வமைச்சின் பிரதான பொறுப்பொன்றாகக் காட்டப்பட்டுள்ளது. அதன்படி நீதிமன்றங்களில் குவிகின்ற வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதற்காக மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு, கடன் இணக்க சபைத் திணைக்களம் மற்றும் சர்வதேச நடுத்தீர்ப்பு மையம் போன்ற மாற்றுவழி பிரச்சினைகளைத் தீர்க்கும் பொறிமுறைகள் அமைச்சின் கீழ் தொழிற்படுகின்றன. அத்துடன் அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் நிபுணத்துவ விஞ்ஞான சான்றுகளை வழங்குதல் நீதி நிருவாகத்தை துரிதப்படுத்துவதற்கு மிகவும் முக்கியமாகிறது.

அத்துடன் சட்டத்தின் உதவியை நாட முடியாதுள்ள மக்களுக்காக சட்ட உதவி ஆணைக்குழுவினால் அனைத்து பிரசைகளுக்கும் நீதியை அணுகுவதற்கான சமமான வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக பாரியதொரு பணி நிறைவேற்றப்படுகிறது. குற்றவாளிகளை தவறாளர்களாக்குவதற்காக நீதிமன்றங்களில் சாட்சியங்களை அளிப்பதற்கு சாட்சிகளை ஊக்குவிப்பதற்கு குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்காக தேசிய அதிகார சபை செயல்படுகிறது. அத்துடன் சமாதான நீதிவான்கள், திடீர் மரண விசாரணையாளர்கள், சத்தியப் பிரமாண ஆணையாளர்கள், மற்றும் சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களை நியமிக்கும் மற்றும் நிர்வகிக்கும் அலுவல்களும் இவ்வமைச்சின் மூலம் செய்யப்படுகின்றன.

1.2. நிறுவனத்தின் தூரநோக்கு ,பணிக்கூற்று,குறிக்கோள்கள்

தூர நோக்கு

பொது மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான நீதி அமைப்பு – நியாயமான மற்றும் சுபீட்சமுள்ள இலங்கை

இலக்கு

மக்களை முன்னிலைப்படுத்தி வினைத்திறனான நீதிமன்ற நிர்வாகத்தின் மூலம் இலங்கை மக்களுக்கு ஸ்திரத் தன்மையுள்ள, நியாயமான மற்றும் சுதந்திரமான சூழலை உருவாக்குதல் :

- பயனுள்ள மற்றும் காலத்துக்கேற்ற சட்ட சீர்திருத்தம்,
- கொள்கை அபிவிருத்தியை முன்னெடுத்தல்.
- சர்வதேச அமைப்புக்களுடன் ஆதரவாக செயலாற்றுதல் மற்றும் இணைதல் மற்றும்
- சமூக சட்ட சேவைகள்

மதிப்பு

- தொடர்ச்சி
- நம்பிக்கை
- உள்ளடக்குதல்
- வெளிப்படைத் தன்மை
- பொறுப்புக் கூறல்.

நோக்கம்

- ❖ நீதி நிலைநாட்டும் பொறிமுறையை வலுப்படுத்தல் .
- ❖ சட்ட மறுசீரமைப்பை மேம்படுத்தல் மற்றும் சட்டங்களை இயற்றுதல் .
- ❖ சட்ட அதிகாரத்தை மேம்படுத்தல் மற்றும் அனைவருக்கும் நீதி அணுகலுக்கான சம வாய்ப்புக்களைப் பாதுகாத்தல் .
- ❖ நீதிமன்றங்கள் தமது பணிகளை வினைத்திறனாக மேற்கொண்டு செல்வதற்கேற்ற சாதகமான சூழலை உருவாக்குதல் .
- ❖ பொது மக்களுக்கு விரைவான மற்றும் மிகச் சிறந்த சேவையை வழங்குவதை முக்கிய நோக்காகக் கொண்டு நீதிமன்றங்களில் வழக்கு விசாரணை செய்தல் மற்றும் தீர்ப்பளித்தல் போன்றவற்றில் நிலவும் தாமதங்களுக்கு தீர்வு காணுதல் .
- ❖ பயிற்சிகளின் மூலம் நீதித் துறைச் சேவையின் வினைத்திறனையும் தரத்தையும் , . .மேம்படுத்துதல்
- ❖ மாற்று பிணக்கு தீர்ப்பு முறைமையை வலுப்படுத்துதல் .

- ❖ குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் மற்றும் உரித்தைத் தயாரித்தல், அமுல்படுத்தல் மற்றும் அவ்வாறான உறுதிப்படுத்தல் அமுல்படுத்தல், பாதுகாத்தல் உரித்துக்களையும் மேம்படுத்தல் உரிமைகளையும் மற்றும் நடைமுறைப்படுத்தல் போன்றவற்றுக்கான பொறிமுறையை வகுத்தல்.

- ❖ சகல இலங்கையர்க்கும் நீதிக்கான அணுகலில் கிட்ட வேண்டிய சம வாய்ப்புக்களை வழங்குவதற்கு அவர்களின் பொருளாதார அல்லது பாலினம் சாதி சமூக நிலை , தேசியம் அல்லது ஊன நிலை போன்ற பாகுபாடின்றி நீதியைப் பெறுவதற்கான சம .வாய்ப்புக்களை வழங்கும் சமூகத்தை உருவாக்குதல்
- ❖ சமூகத்தில் நல்லிணக்கத்தையும் .சகவாழ்வையும் அடைதல் ,
- ❖ சிறைச்சாலைகளின் நெரிசலைக் குறைத்தல்.
- ❖ நீதி அமைச்சின் விடயப் பரப்பினுள் அடங்கும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் வினைத்திறனையும். தரத்தையும் மேம்படுத்தல் ,


1.3. முக்கிய செயல்பாடுகள்

நீதியமைச்சிடம் உரித்தாக்கப்பட்டுள்ள பணியானது காலத்துக்கு காலம் அமைச்சின் விடயங்கள் உரித்தாக்கல் திருத்தத்துடன் மாறுபடுவதுடன் பொதுவாக பின்வரும் பணிகள் இவ்வமைச்சிடம் உரித்தாக்கப்பட்டுள்ளன.

- நீதி நிருவாகத்திற்கான பொறிமுறை தொடர்பிலான கொள்கைகளையும் திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தல்.
- குறித்த தேசிய நோக்கங்களை எய்தும் பொருட்டு தேசிய திட்டமிடல் அதிகாரிகளுடன் உடன்பட்ட கால வரையறையினுள்ளும் வரவுசெலவுத்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வளங்களை விஞ்சாதவாறும் சொல்லப்பட்ட கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்தல்.
- அரசியலமைப்பின் மூலம் வேறு ஒரு நிறுவனத்திற்கும் சாட்டப்பெறாத நீதி நிருவாகம் தொடர்பிலான அலுவல்கள்.
- சமூகத்தின் தேவையையும் சர்வதேசத்தின் போக்கினையும் கருத்திற் கெண்டு சட்ட முறைமையில் மறுசீரமைப்பை செயற்படுத்தல்.
- நீதிமன்ற முறைமைக்குள் நீதி நிருவாகத்தில் தாமதங்களைத் தடுத்தல் உட்பட ஒட்டுமொத்த நிருவாகம் தொடர்பாக எல்லா விடயங்களையும் முறையாகவும் செயற்திறனுடனும் செயற்படுத்தல்.
- அரசாங்கத்தின் சார்பாக குற்றவியல் வழக்குகளைத் தொடுத்தலும் குடியியல் சட்ட நடவடிக்கைகளும்.
- அரசாங்கத்திற்கும் எல்லா அரச திணைக்களங்களுக்கும் சட்ட ஆலோசனை வழங்கல்
- சட்ட வரைவு
- யாதேனுமொரு தவறாளி மீது விதிக்கப்பட்ட தண்டனை தொடர்பில் மன்னிப்பளித்தல், குறித்த தண்டனையை மாற்றீடு செய்தல், தணித்தல், தாமதித்தல், இடைநிறுத்தல் ஆகியன தொடர்பில் ஆலோசனை வழங்கல்.
- ஒட்டுமொத்த காதி நீதிமன்ற முறைமையின் பயனுறுதியையும் வினைத்திறனையும் மேம்படுத்தும் பொருட்டு தகுந்த வேலைத்திட்டமொன்றை வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்
- தொழில் நியாயசபைகளை நிருவகித்தலும் அது தொடர்பான ஏனைய அலுவல்களும்..
- சட்டங்களை ஆவணப்படுத்தலும் ஒருங்கிணைத்தலும் கோவைப்படுத்தலும்.
- சட்டச் சொற்றொகுதிகளை தயாரித்தல்.
- சட்ட அறிக்கைகளை வெளியிடல்.

- **குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான விடயங்கள்**
- **இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையச் சட்டம்** (2000 **இல**. 44) **தொடர்பான விடயங்கள்**
- தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் நாட்டிற்குள் நீடித்த அமைதி மற்றும் குறிப்பிட்ட நோக்கத்திற்காக கொள்கை கட்டமைப்பை உருவாக்குதல்
- சிறைச் சீர்திருத்தங்கள தொடர்பான கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்தல்.
- சிறைநிர்வாகம் மற்றும் மறுசீரமைப்பு
- சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கருத்திட்டங்கள் தொடர்பானவை
- **அமைச்சின் கீழ் வரும் திணைக்களங்கள்/ நிறுவனங்களைக் கண்காணித்தலும் இத் திணைக்களங்கள்/ நிறுவனங்களின் கீழ் வரும் ஏனைய எல்லா விடயங்களும்.**

1.4. நிறுவன விளக்கப்படம்



1.5. இந்த அமைச்சின் செயலாளர் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராகும் திணைக்களங்கள்.

01. சட்டமா அதிபர் திணைக்களம்
02. சட்ட வரைஞர் திணைக்களம்
03. இலங்கை சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்
04. அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம்
05. கடன் இணக்க சபைத் திணைக்களம்
06. உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்
07. சிறைச்சாலைகள் திணைக்களம்
08. சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்

1.6. ஏனைய நிறுவனங்கள்

செலவினத் தலைப்பு (110)

01. மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு
02. நீதித் துறையல்லாத அலுவலர்களின் பயிற்சி நிறுவனம்
03. இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு
04. இலங்கை நீதிபதிகளின் நிறுவனம்
05. குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபை
06. தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம்
07. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
08. இழப்பீடு அலுவலகம்
09. புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் அலுவலகம்

செலவினத் தலைப்பு (228)

01. தொழில் நியாய சபைகள் செயலாளர் அலுவலகம்
02. மீயுயர் நீதிமன்ற முகாமைத்துவ சபை

*காதி மேன்முறையீட்டுச் சபை மற்றும் காதி நீதிமன்றம்

நாடுபூராகவும் காதி நீதிமன்றங்கள் 64 மற்றும் கொழும்பில் அமைந்துள்ள காதி மேன்முறையீட்டுச் சபைக்கு அவசியமான ஏற்பாடுகள் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சினால் வழங்கப்படுவதுடன் நிர்வாக அலுவல்கள் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

*நீதிமன்றங்கள்

நாடு பூராகவும் 198 நீதிமன்றங்களுக்கு (மாகாண குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றங்கள், வணிக மேல் நீதிமன்றம், விஷேட மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம், சிறுவர் நீதிமன்றம், ஏற்பாடுகளானது செலவினத் தலைப்பு 228 இனால் வழங்கப்படுவதுடன் நீதிமன்றங்களின் நிர்வாகமானது பிரதம நீதியரசர் மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழவினால் மேற்கொள்ளப்படும்.

***சட்டக் கல்லூரி**

சட்டக்கல்லூரியினையும் இவ்வமைச்சின் கீழ் வர்த்தமானப் பத்திரத்தின் மூலம் வெளியிடப்பட்டிருப்பதுடன் அதற்கு 110 அல்லது 228 செலவினத் தலைப்புக்களினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாது.

1.7. பிரதான செயற்திட்டங்களின் தகவல்கள்

செயற்திட்டங்களின் பெயர்	பங்களிப்புச் செய்யும் முகவர் நிறுவனம்	செயற்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவினம்	செயற்திட்டத்தின் கால எல்லை
வினைத்திறனான மற்றும் பயனுள்ள நீதித் திட்டம் .(Efficient and Effective Justice Project)	USAID	US$ 15Mn	5 years 2022-2026
சமூக நல்லிணக்கம் மற்றும் ஒப்புரவு செயற்திட்டம்)Social cohesion and Reconciliation Project(	USAID	US$ 19Mn	5 Years 2018-2024
நீதித் துறைக்கு பங்களிப்பு வழங்குதல் . (Support to Justice Sector)	EU	EUR 19 MN	4.5 Years 2022-2026
இலங்கையின் சமூக சகவாழ்வு மற்றும் சமாதானத்தை வலுப்படுத்தல்).Strengthening social Cohesion and peace in Sri Lanka (SCOPE)	EU	EUR 11Mn (8Mn EU,3Mn AA)	3 Years 2022-2025
பயனுள்ளவாறு பிணக்குகளைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்த சபை ஆணைக்குழுவுக்கு ஆதரவு அளித்தல் . (Supporting Effective Dispute Resolution (SEDR)Mediation Board Commission (Comes under STRIDE Project)	EU	EUR 7Mn	2020-2024
இலங்கை குற்றவியல் நீதி அமைப்பின் தடயவியல் மருத்துவ பகுப்பாய்வுத் திறனை வலுப்படுத்துதல் (Strengthen Capacity Building of Forensic Drug Analysis in the Criminal Justice System in SL)	KOICA	US$ 4.5MN	4 Years 2021-2024
இலங்கையினுள் நீதிக்கான நியாயமான அணுகலை வலுப்படுத்தல். (Strengthening Equitable Access to Justice in Sri Lanka)	JICA	JPY 60MN	2023-2025
யாழ் மாவட்டத்தில் 2889 மழை நீர் சேகரிப்புத் தொட்டிகளை நிர்மாணித்தல். (Construction of 2889 Rain Water Harvesting Tanks in Jaffna District)	Indian High Commission	SLR 421,865,305.91	Signed for 3 years (2017) extend-2024
இலங்கையின் நீதி அமைப்பின் தொலைதூர செயற்பாட்டை மேம்படுத்தல்: கட்புல வழக்கு விசாரணை மற்றும் நடமாடும் நீதிமன்றங்கள். (Promoting the Remote Functioning of	UNODC ,U.S. Department of State Bureau of International	US$ 520,000	2021-2022

the Justice System in Sri Lanka: Virtual Trials and Mobile Courts)	Narcotics and Law Enforcement Affairs(INL)		
உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான செயற்திட்டங்கள் (Infrastructural Projects)	ICRC International Committee of the Red Cross	Intervention	
வர்த்தக சட்ட முதலீடு மற்றும் ஒப்பந்த அமுலாக்கத்தின் மீது கவனத்தைச் செலுத்தி நீதிப் பிரிவின் வினைத்திறனை வலுப்படுத்தல். (Strengthening the Efficiency of the Justice Sector with a Focus on Commercial Law Investment and contract enforcement)	ADB- Asia Development Bank	Technical Assistant	
International Organization for Migration (IOM)	International Organization for Migration (IDM)	LKR 12.8Mn	15th of December 2023

02. அத்தியாயம் - முன்னேற்றமும் - எதிர்கால நோக்கும் விசேட, சாதனைகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

சட்ட மறுசீரமைப்பு மற்றும் நீதி அமைப்பிற்கு வசதிகளை ஏற்படுத்துதல் உள்ளிட்ட முக்கிய பல செயற்பாடுகள் இவ்வமைச்சிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சட்ட மறுசீரமைப்புக்கள் எடுக்கப்பட்ட ஒரு வரலாற்று தருணத்தை 2023 ஆம் ஆண்டில் கடக்க முடிந்தது. 54 சட்ட மறுசீரமைப்புக்களது பாரிய பணிகள் நிறைவடைந்துள்ளதுடன் பின்வரும் 18 சட்ட மறுசீரமைப்புக்களைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

	சட்டத்தின் பெயர்	நோக்கம்	சபாநாயகர் சான்றுரைப்படுத்திய திகதி
01.	2023 இன் 1 ஆம் இலக்க குத்தகைக்கு கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல் சட்டம்	குத்தகை உடன்படிக்கையின் கீழ் குத்தகைக்கு விடப்பட்டுள்ள வளவுகளின் உரித்தை மீளப் பெற்றுக் கொள்வது தொடர்பான நடவடிக்கைமுறை பற்றிய ஏற்பாடுகளை செய்தல், நிலுவை குத்தகை தவணைப் பணம், சேவைக் கட்டணம் மற்றும் அளவிடப்பட்ட நட்டங்களை அறவிட்டுக் கொள்வதை முறைப்படுத்துதல் மற்றும் அது தொடர்பான அல்லது விளைவாய்ந்த தன்மைவாய்ந்த விடயங்களுக்கு ஏற்பாடுகளை செய்தல்.	17.01.2023
02	2023 இன் 2 ஆம் இலக்க புனர்வாழ்வுப் பணியகம் சட்டம்	போதைவஸ்துக்களுக்கு அடிமையான ஆட்களை முகாமைத்துவம் செய்தல், புனர்வாழ்வளித்தல் மற்றும் சிகிச்சையளிப்பதற்காக புனர்வாழ்வளிப்பு பணியகத்தை தாபித்தல்	24. 01. 2023
03	2023 இன் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டம்	வாக்காளர்கள் வாக்குகளை பயன்படுத்தும் போது அழுத்தம் இன்றி வாக்குகளை பயன்படுத்துவதை உறுதி செய்வதற்கு யாதாயினுமொரு கட்சி, வேட்பாளர் அல்லது குழு வாக்காளர்களை தூண்டும் நோக்கத்துடன் செய்யப்படும் செலவினத்தை கட்டுப்படுத்துவது சட்டத்தின் நோக்கமாகும்.	24.01.2023
04	2023 இன் 7 ஆம் இலக்க குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்த)ச் சட்டம்	மருத்துவர்கள் 3 பேருக்கு மேற்படாத மருத்துவ பரிசோதனைக்கு ஆளொருவருக்கு ஏற்பட்டுள்ள காயங்களுக்கான இழப்புகள் தொடர்பில் தாமே முன்வருவதற்கு அல்லது அவ்வாறான மருத்துவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் அதிலுள்ள விடயங்களை வழக்கு விசாரிக்கும் போது பயன்படுத்த இடமளிப்பதன் மூலம் வழக்கு விசாரணையை துரிதப்படுத்துவது இந்த திருத்தத்தின் 429 ஆம் பிரிவாக ‘‘மருத்துவ	27.06.2023

		பரிசோதனைக்கு ஆணைக்குழு” ‘டி’ தலைப்பின் கீழ் உட்புகுத்தல்.	
05	2023 இன் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டவரைவு	இழஞ்சம் மற்றும் ஊழலை குறைப்பதற்கு பலமான சட்ட ரீதியான சட்டகத்தை ஐக்கிய நாடுகளின் ஊழல் எதிர்ப்பு சமவாயம் மற்றும் சர்வதேச தரநியமங்களுக்கு இசைவாக அமுல்படுத்துவதற்கு புதிய சட்டமொன்றை அறிமுகம் செய்தல்.	08.08.2023
06	2023 இன் 10 ஆம் இலக்க குற்றச்செயல்களுக்கு பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம்	குற்றச்செயல்களுக்கு பலியாக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் மற்றும் உரித்துக்களை தயார் செய்தல் மற்றும் மேற்படி உரிமைகள் மற்றும் உரித்துக்களைப் பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் தகுந்த சர்வதேச நியமங்கள், சிறந்த நடைமுறைகள் மற்றும் தரநியமங்கள் போன்றவற்றை தத்துவமுள்ளதாக்குவதற்கு ஏற்பாடுகளை செய்தல்.	08.08.2023
07	2023 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்தம்) சட்டம்	நபரொருவரது காயங்களுக்கு ஏற்படும் உரிமைகோரல்கள் தொடர்பான வழக்குகளில் மருத்துவ பரிசோதனைகளுக்கான ஆணைக்குழுவினது ஆவண குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை சட்டத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை அறிமுகப்படுத்தல்.	2023.10.03
08	1978 ஆம் ஆண்டின் 2 நீதி ஒழுங்கமைப்புச் சட்டத்தின் 29 அ. பிரிவின் (2) ஆம் உப பிரிவின் கீழ் கட்டளை	2023 மே மாதம் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இரண்டு மில்லியன் ரூபாய் அல்லது இரண்டு மில்லியன் ரூபாய்க்கு அதிகரிக்காமல் வட்டியைத் தவிர்த்து பிணக்குகளின் மதிப்பை சிறு உரிமை கோரல் நீதிமன்றத்திற்கு குறிப்பிடுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.	2023.04.21 ஆம் திகதி வெளியிடப்பட்டது. (வர்த்தமானி இலக்கம் 2328/16) 2023.10.23 ஆம் திகதி அங்கீகாரம்
09	2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் பிணக்குகள் பற்றிய விஷேட வகை) சட்டத்தின் திருத்தம் (மத்தியஸ்தர்களுடைய தகைமைகள்)	தற்போது நிலவுகின்ற மத்தியஸ்த செயற்பாட்டில் மத்தியஸ்த சபைகளில் நீதி அதிகாரத்துடன் தொடர்பான நடைமுறைச் சிக்கல்களைத் தீர்ப்பதன் அவசியம் (மத்தியஸ்த செயல்பாட்டிற்கான விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்வது, சமூக மத்தியஸ்த சபைகள் மற்றும் முக்கிய மத்தியஸ்த சபைகளுடன் வழக்கு மற்றும் நிர்வாகத் தவறுகளுக்கு நிவாரணச் சபை நடவடிக்கைகளுக்கான கால வரையறை மற்றும் நீதிமன்றங்களில் வழக்குகளைத்	2023.01.14 ஆம் திகதி வெளியிடப்பட்டது. (வர்த்தமானி இலக்கம் 2314/80) 2023.10.03 ஆம் திகதி அங்கீகாரம்

		தீர்ப்பது வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பான ஏற்பாடுகள்	
10	2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சமாதான நீதவான்களது ஒழுங்குமுறை	நிரந்தர மற்றும் செயன்முறையிலுள்ள சேவையில் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும நிர்வாக கிராம அலுவலகருக்கு அங்கீகாரம் வழங்குவதற்காக இலங்கைக் குடியரசின் சமாதான நீதவானாக பதவியில் இருந்து செயற்பட வேண்டும்.	2023.12.14
11	2023 ஆம் ஆண்டின் 02 சமாதான நீதவானது ஒழுங்குமுறை	1)முனைப்பான நிரந்தர சேவையிலுள்ள நன்னடத்தை மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் சகல நன்னடத்தை அலுவலர்களும், அவ்வலுவலர் நியமிக்கப்பட்ட மாகாணத்தின் அந்தந்த நிர்வாக மாவட்டத்திற்கான சமாதான நீதிபதியாக; மற்றும் 2)செயன்முறையிலுள்ள நிரந்தர சேவையில் உள்ள பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பு அலுவலர்களையும் பிரதேச செயலகப் பிரிவும் உரித்தான அந்தந்த நிர்வாக மாவட்டத்திற்கும் உத்தியோகபூர்வமான வகையில் சமதான நீதவானாக அங்கீகரிப்பதற்கு	2023.08.29 ஆம் திகதி வெளியீடு (வர்த்தமானி இலக்கம் 2347/10) அங்கீகாரம் 2023.10.18
12	2023 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்தம்) சட்டம்	குடியியல் நடவடிக்கைமுறை சட்ட கோவையில் காட்டப்பட்டுள்ள முந்தைய வழக்குச் செயற்முறையினை நடவடிக்கை முறைகளைத் திருத்துதல் மற்றும் சாட்சிப்பட்டியல்கள் மற்றும் ஆவணங்களைக் கோப்பிடல், விசாரணைகள் சேர்க்கைகள், ஆவணங்களைப் பரிமாற்றம் செய்தல் மற்றும் ஏற்றுக்கொள்வது தொடர்பான முந்தைய சட்டத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்தல், இலத்திரனியல் ஆவணங்களை அங்கீகரித்தல் (1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க சாட்சி) (விசேட ஏற்பாடுகள் சட்டம்) போன்றவை	2023.11.08
13	2023 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு (திருத்தம்) சட்டம்	ஐக்கிய நாடுகளின் ஊழல் எதிர்ப்பு உடன்படிக்கைக்கு மற்றும் சர்வதேச தரத்திற்கு இணங்க லஞ்சம் மற்றும் ஊழலைக் குறைப்பதற்காக வலுவான சட்ட	2023.11.08

		கட்டமைப்பை செயல்படுத்துவதற்கு புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தல்	
14	1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க மாகாண மேல் நீதிமன்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் முதலாவது அட்டவணையின் (1) ஆவது பந்தியின் கீழ் அறிவித்தல்	மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கடுமையான பணிச்சுமையைக் குறைக்க மாவட்ட நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள் மற்றும் கட்டளைகளால் மேன்முறையீடுகளை விசாரிப்பதற்கான சட்டத்தை திருத்துதல்.	2023.12.28
15	தேர்தல் (முக்கிய ஏற்பாடுகள்) சட்ட வரைவு	தேர்தல் மனுவொன்றை தாக்கல் செய்வதற்கான கால வரையறையை 42 நாட்களாக நீடித்து தேர்தல் தொடர்பான குற்றங்களுக்குரிய தண்டப் பணத்தினை அவ்வப்போது உயர்த்த வேண்டும்.	2023.10.03
16	2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சமாதான நீதவான்களது ஒழுங்குமுறை	வட மாகாண சபையினால் இயற்றப்பட்ட நிதிச் சட்டங்களை நடைமுறைப்படுத்தவதற்கு வட மாகாணத்திற்கு அதிகாரம் அளித்தல்.	2023.08.29 வெளியீடு (வர்த்தமானி இலக்கம் 2347/10) 2023.10.18 ஆம் திகதி அங்கீகாரம்
17	சிரேஷ்ட சட்டத்தரணி ஆலோசகர் கௌரவமளிக்கும் சட்டவரைவு	சிறந்ததும் உயர் தரத்தினதுமாக வெளிப்படுத்தியதுடன் பங்களிப்பை வழங்கிய சிரேஷ்ட ஆலோசகரின் பணியை அங்கீகரித்து கௌரவிக்க	2023.10.18


பின்வரும் கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகள்
2023 வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

தலைப்பு	நோக்கம்	தற்போதைய நிலைமை
2003 இன் 21 ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் (விசேட வகையிலான பிணக்குகள்) சட்டம், மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் (4) ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்படி சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளைகள்	காணிப் பிணக்குகளை தீர்த்துவைப்பதற்கான மத்தியஸ்த சபையின் மத்தியஸ்தம் செய்பவர்களை தெரிவு செய்துகொள்வதற்கு மத்தியஸ்தம் செய்பவர்களுக்கான தகைமைகளை அறிமுகம் செய்தல்.	2023..01.14 ஆம் திகதிய 2314/80 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை
2003 இன் 21 ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் (விசேட வகையிலான பிணக்குகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தத்துவமளிக்கப்பட்டு, நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளைகள்	2021 டிசம்பர் 21 ஆம் திகதிய 2259/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டளையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 2023 இன் 21 ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் (விசேட வகையிலான பிணக்குகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை "ரூபா ஐந்து இலட்சத்திற்கு (ரூ..500,000 /=) குறைவாதல் வேண்டும்" என்ற பதம் மற்றும் இலக்கத்திற்குப் பதிலாக ரூபா ஒரு மில்லியன் (ரூ.1,000,000/=) அல்லது அதற்குக் குறைவாதல் வேண்டும்" எனும் பதம் மற்றும் இலக்கத்தை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தம் செய்தல்.	2023.04.01ஆம் திகதிய 2328/19 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை

இச்சட்ட திருத்தங்களுள் நாட்டினுள் காலாகாலமாக நிலவும் பிரச்சினைகளுக்கு நேர்மறை தீர்வுகள் வழங்கப்பட்டன. பல வருடங்களாக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த சொத்து உரித்தை மீண்டும் பெற்றுக்கொள்வது தொடர்பாக சட்டத்தினை நாட்டினுள் பாரிய பேரழிவொன்றாக உருவாகியுள்ள போதைப்பொருட்களுக்கு அடிமைப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வளிப்பு பணியகத்தினை தாபித்தல், தேர்தல் வேட்பாளர்களின் செலவு முகாமைத்துவம் மற்றும் லஞ்ச மற்றும் ஊழல்மோசடிகளை குறைப்பதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஊழல் எதிர்ப்பு சட்டமானது முக்கியமானதாகும்.


இதுவரையில் நீதித்துறை எதிர்கொண்டுள்ள மிக அழுத்தமான நெருக்கடியானது காலாகாலமாக தீர்ப்பதற்காக வேண்டி குவிந்துள்ள ஏராளமான வழக்குகள் ஆகும். 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் காணப்படுகின்ற வழக்குகளின் எண்ணிக்கை பின்வருமாறு.

2015 – 2023 வரை தீர்க்கப்படவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை



இத் தீர்க்கப்பட வேண்டிய வழக்குகளானது ஏராளமாக இருப்பது நீதவான் நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களிலாகும். ஒவ்வொரு நீதிமன்றத்திற்கேற்ப வழக்குகள் குவிந்துள்ள விதம் பின்வருமாறு.

நீதிமன்றங்களில் 2023.12.31 திகதிக்கு தீர்க்கவுள்ள வழக்குகளின் தொகை



நீதிமன்றங்களில் காணப்படுகின்ற இந்நிலைமையானது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு கடுமையான வகையில் பாதிப்பதுடன் சர்வதேச தரப்படுத்தல் வரிசையில் இலங்கை கீழிறங்க காரணியொன்றாக இருக்கின்றது. அது நாட்டினுள் மோசமான முதலீட்டுச் சூழலுக்கு வழிவகுப்பதுடன் வெளிநாட்டு முதலீடுகளையும் வலுவிழக்கச் செய்யும்.

நீதியினை நிலைநாட்டலில் காணப்படுகின்ற இத்தாமதத்தினை மாற்றுவதற்கு பிரதான அவசியமொன்றாக நீதிமன்ற அமைப்பினை தன்னியக்க முறைமைக்கு உட்படுத்தல் இனங்காணப்பட்டுள்ளதுடன் எமது நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையுடன் இக்கருத்திட்டத்தினை அமுல்படுத்துவது மிக்க சவாலாக அமைந்துள்ளது.

நீதிமன்றங்களில் காணப்படும் வழக்குத் தாமதங்களுக்கு காரணமாக மற்றுமொரு பிரதானமான காரணியொன்றாக நீதிமன்றங்களுக்கு சமர்பிக்கப்படும் பிணக்கங்களுக்குச் சமமான விகிதப்படி நீதவான்களது எண்ணிக்கை போதாமையினாலாகும்.

2023.12.31 திகதிக்கு நீதிமன்றங்களில் உள்ள நீதிபதிகள் பற்றிய விபரம் பின்வருமாறு

நீதிமன்றங்கள்	நீதிமன்றங்களின் எண்ணிக்கை	நீதிமன்றக் கூடங்கள்	தீர்க்கப்பட வேண்டியுள்ள வழக்குகளின் எண்ணிக்கை (2023.12.31)	நீதிபதிகளின் எண்ணிக்கை (2023.12.31)	ஒரு நீதிபதிக்கு உள்ள வழக்குகளின் எண்ணிக்கை
உயர் நீதிமன்றம்	01	04	5,733	17	337
மேன்முறையீட்டு நீதிமன்றம்	01	10	4,141	20	207
குடியியல் (சிவில்) மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள்	22	22	5,989	87	472
வர்த்தக மேல் நீதிமன்றம்	01	04	8,528		
விசேட மேல் நீதிமன்றங்கள்	01	02	01		
மேல் நீதிமன்றங்கள் (குற்றவியல்)	34	48	26,542		
மாவட்ட நீதிமன்றங்கள்	33	61	259,763	259	4,117
மாவட்ட நீதவான் நீதிமன்றங்கள் ஒரு நீதிபதி உள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகள்	52	79	-		
நீதவான் நீதிமன்றங்கள்	53	78	805,502		
சுற்றுலாத் துறை நீதவான் நீதிமன்றங்கள்	25	25	-		
சிறுவர்களுக்கான நீதவான் நீதிமன்றங்கள்	02	02	1,215		
தொழில் நியாய சபைகள்	39	39	4,699	33	142
மொத்தம்	**264**	**375**	**1,122,113**	**416**	

ஏனைய நாடுகளில் அண்ணளவாக சனத்தொகை ஒரு மில்லியனுக்கான நீதவான்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக காணப்படவதுடன் அதன் எண்ணிக்கை 18 ஆகும். இந்நிலையினை புரிந்து கொண்டு அமைச்சினால் 2020 ஆம் ஆண்டு முதல் நீதவான்களின் எண்ணிக்கை மற்றும் நீதிமன்றங்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கான ஏற்பாடொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி சிரமமான சந்தர்ப்பங்களில் கூட 2023 ஆம் ஆண்டில் நீதிமன்ற அலுவலர்கள் 30 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். அதன்படி நீதிமன்றங்களின் எண்ணிக்கையினை ஒரு குறிப்பிட்ட அளவினால் அதிகரிக்க முடிந்தது. அவ்வாறே மாவட்ட நீதிமன்றங்கள் பண வழக்குகளால் குவிந்து காணப்பட்டதுடன் அதற்குத் தீர்வாக சிறு உரிமை கோரல் நீதிமன்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதன்படி கொழும்பு, கண்டி மற்றும் மாத்தறை ஆகிய இடங்களில் தனித்தனியாக சிறிய உரிமைகோரல் நீதிமன்றங்களைத் தாபிக்க முடியுமாகியது.

நீதிமன்றங்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்காக பெரிய கட்டிட நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் நாட்டினுள் ஏற்பட்டுள்ள மோசமான பொருளாதார நிலையுடன் சந்தையின் விலை ஏற்ற இறக்கத்திற்கிடையிலும் அதன் மேலதிக பணிகளை மேற்கொள்ள பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன. அவ்வாறே செலவினைக் கட்டுப்படுத்தும் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி பல கருத்திட்டங்களை நிறுத்த வேண்டி ஏற்பட்டது. ஆனாலும் இரத்தினபுரி மற்றும் வெலிமடை நீதிமன்ற கட்டிடத்தொகுதி பொதுமக்களது பாவனைக்கு வழங்க முடியுமானது. தெல்தெனிய மற்றும் காலி நீதிமன்ற கட்டிடத்தொகுதியின் நிர்மாணப் பணிகள் நிறைவடையவுள்ளன.

இரத்தினபுரி நீதிமன்ற கட்டிடம்





வெலிமடை நீதிமன்ற கட்டிடம்





மேலும் 1989 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தின் புதுப்பித்தல் பணிகளை சீன அரசாங்கத்தின் பூரணமான உதவியின் கீழ் ஆரம்பிக்க முடியுமானது. தாமதமடைந்த இக் கருத்திட்டத்தினை அமுல்படுத்த முடியுமானமையானது பகுதியளவில் அப்புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்ள இவ்வமைச்சினை வாடகை அடிப்படையிலான கட்டிடமொன்றிற்கு இடம்பெயர்த்த முடியுமானதூடாகவாகும். இவ்வெளிநாட்டு உதவிக் கருத்திட்டமானது 2015 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்த முடியாது காணப்பட்ட கருத்திட்டமொன்றாகும். இதன் அடுத்த கட்டமாக உயர் நீதிமன்றமும் வேறொரிடத்தில் தாபிக்கப்பட வேண்டும். உயர் நீதிமன்ற புதுப்பித்தல் நிறைவடையும் வரையில் தற்காலிகமாக தாபிப்பதற்காக கொழும்பு பீ.ஸீ.ஸீ. காணியில் 14 மாடிகளைக் கொண்டதான கட்டிடத்தின் 06 மாடிகள் வரையான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக்கட்டிடமானது மீயுயர் நீதிமன்ற புதுப்பித்தலின் பின்னர் கொழும்பில் புதுக்கடையிலுள்ள பழைமைவாய்ந்த கட்டிடங்களில் அமைந்துள்ள நீதிமன்றங்களைத் நிறுவுவதற்கு பாவிக்க முடியுமாகும்.

நீதித்துறை வினைத்திறனுடன் நாட்டினுள் சட்ட ஆதிக்கத்தை ஊக்குவிப்பதற்காக வேண்டி பாரிய பணிகளை நிறைவேற்றுவதற்காக இவ்வமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. நீதிமன்றங்களில் குவிந்துள்ள தீர்க்க வேண்டிய வழக்குகளைக் குறைத்துக் கொள்வதற்காக மாற்றுவழியாக பிணக்குகளைத் தீர்க்கும் முறை அதிகபட்சமாக வலுவூட்டப்பட்டது. நாடு பூராகவும் சமூக மத்தியஸ்தர்கள் சபை 329 இயங்குவதுடன் 8,400 பேர் சேவையை வழங்கி வருகின்றனர். காணிப் பிரச்சினைகள் தொடர்பாக 16 மாவட்டங்களில் முக்கிய மத்தியஸ்தச் சபைகளாக 16 முக்கிய மத்தியஸ்த சபைகள் அமுல்படுத்தப்பட்டிருப்பதுடன் அதற்கு 489 மத்தியஸ்தர்களது உதவியும் வழங்கப்பட்டது.

விபரம்	பிணக்குகளின் எண்ணிக்கை
2023ஆண்டின் தொடக்கத்தில் தீர்க்கப்படவுள்ள பிணக்குகளின் எண்ணிக்கை	35,048
01.01.2023 இலிருந்து 31.12.2023 வரையாகவுள்ள பிணக்குகளின் எண்ணிக்கை	211,678
மொத்தம்	**246,726**
வாபஸ் பெறப்பட்டபிணக்குகளின் எண்ணிக்கை	8,589
நிராகரிக்கப்பட்ட பிணக்குகளின் எண்ணிக்கை	3,491
பிணக்காளர் சமூகளிக்காததனால் தீர்க்கப்படாத பிணக்குகளின் எண்ணிக்கை	93,751
கலந்துரையாடப்பட்டமொத்தபிணக்குகள்	98,374
கலந்துரையாடலின் பின் தீர்க்கப்பட்ட பிணக்குகளின் எண்ணிக்கை	67,751
தீர்க்கப்பட்டபிணக்குகளின் சதவீதம்	**69.87%**
தீர்க்கப்பட்ட பிணக்குகளின் மொத்தம்	204,205
2023.12.31 திகதிக்கு கலந்துரையாடப்பட வேண்டிய மொத்த பிணக்குகள்	42,521

01.01.2023 இலிருந்து 31.12.2023 வரையானகாலப்பகுதியில் மத்தியஸ்த சபைகளுக்கு ரீதியாக கிடைக்கப்பெற்ற பிணக்குகள்

பிணக்குகள் முன்வைக்கப்படும் கட்சிகளின் வகைகள்	கிடைக்கப்பெற்றபிணக்குகளின் எண்ணிக்கை	கலந்துரையாடப்பட்ட பிணக்குகளின் எண்.	தீர்க்கப்பட்டபிணக்குகளின் எண்.	கிடைக்கப்பெற்ற பிணக்குகள் %
நீதிமன்றம்	26,337	15,193	10,664	10.7%
பொலிஸ்	59,023	32,395	20,851	23.9%
வங்கிமற்றும் ஏனைய நிதிநிறுவனம்	142,773	41,975	30,589	57.9%
பிணக்காளிகளின்	16,104	7,986	5,092	6.5%
ஏனையவை	2,489	825	555	1.0%
மொத்தம்	**246,726**	**98,374**	**67,751**	

அவ்வாறே சொந்த உறுதிகளை அடிப்படையில் கடனாளிகளுக்கு நிவாரணமளிப்பதற்காக கடன் இணக்க சபை திணைக்களம் செயற்படுகின்றது. சென்ற வருடத்திற்குள் அதன் செயற்திறனுடன் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.


கிளை	நிலுவையில் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை	பெறப்பட்ட கோரிக்கைகள்	இறுதி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை
பிரதான கிளை	170	122	237
கொழும்பு	183	112	190
காலி	197	175	160
கம்பஹா	278	276	255
குருநாகலை	296	204	259
மொத்தம்	**1,124**	**889**	**1,101**

சகல பிரஜைகளுக்கும் தமது நீதிக்கான அணுகலை உறுதி செய்தலுக்காக நாடு முழுவதிலும் தாபிக்கப்பட்டுள்ள 85 சட்ட உதவி நிலையங்களினால் பாரியளவிலான சேவை நிறைவேற்றப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டிற்குல் 182,579 பேருக்கு சட்ட உதவிச் சேவையை வழங்கி இருப்பதுடன் அதனுடன் தொடர்பான விளக்கம் பின்வருமாறு.

வழக்குகள் சம்பந்தமான விபரம்	வழக்குகளின் எண்ணிக்கை
2023.01.01 திகதிக்கு முன்கொண்டுவரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	38,739
2023 ஆண்டின் டிசெம்பர் 31 வரை நடைபெற்ற மொத்த வழக்குகளின் எண்ணிக்கை	51,721
2023 ஆண்டின் ஜனவரி முதல் டிசெம்பர் 31 வரை வழங்கப்பட்ட மொத்த சட்ட ஆலோசனைகளின் எண்ணிக்கை	36,593
2023 ஜனவரி தொடக்கம் டிசெம்பர் 31 வரை சட்ட உதவி பெற்றுக்கொள்வதற்கு தகமை பெற்ற தொகை	13,755
2023 ஜனவரி தொடக்கம் டிசெம்பர் 31வரை புதிதாக பதிவுசெய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	12,982
2023 ஆண்டின் டிசெம்பர் 31 வரை திகதிக்குமுன் கொண்டு செல்லப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	38,905
2023 ஜனவரி தொடக்கம் டிசெம்பர் 31 வரை வழங்கப்பட்ட மொத்த சட்ட ஆலோசனைகளின் எண்ணிக்கை	130,858
2023 ஜனவரி தொடக்கம் டிசெம்பர் 31வரை வழங்கப்பட்ட மொத்த சேவை	**51,721+130,858 =182,579**

கொவிட் தொற்று நிலைமை இல்லாமல் போனவுடன் தொடர்ச்சியான சட்ட உதவிச் சேவை வழங்கல் உயர்வடைந்து சென்ற விதம் பின்வருமாறு.

மொத்த சேவை



குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்புக்கான தேசிய ஆணையம் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் மற்றும் சாட்சிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஆதரிப்பதற்கும் நிறுவப்பட்டது மிகவும் முக்கியமானது. சட்டம் மற்றும் சட்ட அமலாக்கப் பிரிவின் பங்கு பின்வருமாறு.

.

கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளது.

முறைப்பாடுகள் / வேண்டுகோள்கள்		ஆண்டு 2023
I.	உரிமைகள் மற்றும் உரித்துக்கள் மீறுகை தொடர்பானது	105
II.	பிரிவு 8, 9இன் கீழ் குற்றங்களை விசாரித்தல் தொடர்பானது	110
III.	உதவிகளை பெறுவதற்கான வேண்டுகோள்கள்	48
உரிய காலப் பகுதியில் கிடைத்த முறைப்பாடுகள்		**263**

I. உரித்துக்கள் மற்றும் உரிமைகள் மீறல்

2022ஆம் ஆண்டு முதல் முன்கொணரப்படும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை	123
2023ஆம் ஆண்டில் இது வரை கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை	105
மொத்தம்	**228**
விசாரணை செய்யப்பட்டு முடிவடைந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை	58
மேலும் விசாரிக்கப்பட்டு வருகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை	170

II. பிரிவுகள் 8, 9இன் கீழ் குற்றங்கள் தொடர்பான விசாரணை

2022ஆம் ஆண்டு முதல் முன்கொணரப்படும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை	97
2023ஆம் ஆண்டில் இது வரை கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை	110
மொத்தம்	**207**
விசாரணை செய்யப்பட்டு முடிவடைந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை	29
மேலும் விசாரிக்கப்பட்டு வருகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை	178

III. உதவிகளை பெற்றுக் கொள்வதற்கான வேண்டுகோள்கள்

2022ஆம் ஆண்டு முதல் முன்கொணரப்பட்ட வேண்டுகோள்களின் எண்ணிக்கை	58
2023ஆம் ஆண்டில் இது வரை கிடைத்துள்ள வேண்டுகோள்களின் எண்ணிக்கை	48
மொத்தம்	**106**
உதவிகள் வழங்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை	16
VIS கோவைப்படுத்தலுக்குத் தேவையான அலுவல்களை தயார்படுத்தப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை	40
சமகால செவிப்புல கட்புல தொடர்புகளால் சாட்சி பெற்றுக்கொள்வதற்கு தேவையான அலுவல்களைத் தயார்படுத்தியுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை	20
மேலும் உதவி வழங்கிக்கொண்டிருக்கின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை	30

அரவனைப்பு பிரிவால் செய்யப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு


ஆண்டு	வேண்டு கோள்களின் எண்ணிக்கை	விசாரணை செய்யப் பட்டு வருகின்ற மற்றும் இடைக் காலப் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகின்ற வேண்டு கோள்களின் எண்ணிக்கை	பாதுகாப்பு வழங்கப் பட்டு வருகின்ற மற்றும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள வேண்டு கோள்களின் எண்ணிக்கை	விசாரணை செய்யப் பட்டுள்ள வேண்டு கோள்களின் எண்ணிக்கை	சட்டமா அதிபரின் அறிவுரைக ளை பெறுவதற்கா க அனுப்பப்பட்டு ள்ள வேண்டு கோள்களின் எண்ணிக்கை
முன்னைய ஆண்டில்	171	39	100	31	01
2023	189	162	18	09	-
மொத்தம்	**360**	**202**	**118**	**40**	**01**

2023.01.01ஆம் திகதி முதல் 2023.12.31 ஆம் திகதி வரை கிடைத்துள்ள கட்டளைகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு.

ஆண்டு	நீதிமன்றங்களும் மற்றும் ஆணைக்குழுவும் விடுத்த கட்டளைகளின் எண்ணிக்கை	பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகின்ற கட்டளைகளின் எண்ணிக்கை	நிறைவு செய்யப்பட்ட கட்டளைகளின் எண்ணிக்கை
முன்னை ஆண்டுகளில் இருந்து முன்கொணரப் படும் கட்டளைகள்	38	27	11
2023	19	18	01
மொத்தம்	**57**	**45**	**12**

நீதவான்களின் திறன் வளர்ச்சியினை ஏற்படுத்துவதற்காக இலங்கை நீதிபதிகள் நிறுவனம் இயங்குவதுடன் 2023 ஆம் ஆண்டினுல் 24 பயிற்சி அமர்வுகள் 1,104 நீதிமன்ற அலுவலர்களுக்காக நடாத்தப்பட்டது. நீதிமன்றங்களில் ஏனைய அலுவலர்களின் திறன் வளர்ச்சியினை நோக்கி 4,119 நீதித்துறை அல்லாத அலுவலர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளது. மேலும் 306 விண்ணப்பதாரிகளுக்கான 12 வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளும் நடாத்தப்பட்டுள்ளன.

நீதித்துறையினை வலுவூட்டுவதற்காக அமைச்சிற்கு உரித்தான திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் பாரிய பணியினை நிறைவேற்றியுள்ளது. 2023 ஆம் ஆண்டில் பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு உரித்தான 299 சட்டவரைவுகள் சட்டவரைஞர் திணைக்களத்தினால் வரைவுக்குட்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே சென்ற வருடங்களில் சட்ட வரைஞர் திணைக்களம் அதி விஷேடமான சேவையினை பின்வரும் வகையில் மேற்கொண்டுள்ளது.



துரிதமாக நீதியை நிலைநாட்டல் மற்றும் நீதிமன்ற நெரிசலைக் குறைப்பதற்காக அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் பகுப்பாய்வு அறிக்கையினை துரிதமாக வழங்குவது மிக முக்கியமானதாகும். அலுவலர்கள் பற்றாக்குறைக்கு தீர்வொன்றாக 15 பயிற்சியாளர்கள் வெளிநாட்டு உதவியின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். பகுப்பாய்வாளர் திணைக்களத்திற்கு தேவையான ஆய்வக உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன், பகுப்பாய்வு அறிக்கை வழங்கல் டிஜிடல் மயமாக்கலும் மேற்கொள்ளப்பட்டது. போதைப் பொருட்கள் தொர்பான ஏராளமான அறிக்கைகளை விநியோகிக்க வேண்டியிருப்பதானது சவாலாக அமைந்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் பகுப்பாய்வாளர் அறிக்கை விநியோகிப்பதன் முன்னேற்றமானது பின்வருமாறு.

பிரிவு	எஞ்சியுள்ள வழக்குகளின் எண்ணிக்கை	கிடைத்துள்ள வழக்குகளின் எண்ணிக்கை	அறிக்கையிடப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	ஆண்டு மத்தியில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை
போதைவஸ்து மற்றும் உளக்கோளாறு நடத்தைப் பிரிவு	5,709	28,133	24,088	9,754
துப்பாக்கி மற்றும் ஏவகணை பிரிவு	214	594	493	315
வெடிமருந்து மற்றும் தீப்பிடித்தல் பிரிவு	177	661	713	125
நீதிமன்ற நஞ்சியல் பிரிவு (நச்சு வகைகள்)	891	2,730	2,482	1,139
நீதிமன்ற நீர்ப்பாயவியல் பிரிவு	3060	1,909	1,748	3,221
சந்தேகத்திற்குரிய ஆவணங்கள் பிரிவு - ர்	1,057	1,751	1,479	1,329
பல்வகை நீதிமன்ற அம்சங்கள்	225	852	723	354
மதுபானப் பிரிவு	596	11,284	10,427	1,453

மதுசாரம் மற்றும் புகையிலைப் பிரிவு	82	2,756	2,746	92
உணவுச் சட்டத்தின் கீழ் உணவு மாதிரிப் பிரிவு	171	7,590	7,731	30
பல்வேறு உணவு வகைகள்	7	626	623	10
மொத்தம்	**12,189**	**58,886**	**53,253**	**17,822**

சிறைச்சாலைத் திணைக்களம் எதிர்கொள்ளும் பிரதான சவாலாக அமைவது சிறைச்சாலைகளில் கொள்ளத்தக்க அளவினை விட அதிகமான கைதிகள் சிறைச்சாலைக்கு அனுப்பப்படுவதாகும். 2023 டிசெம்பர் 31 ஆம் திகதி அதிகாலையில் திறக்கப்பட்ட வேளையில் 9,640 சிறைக்கைதிகள் மற்றும் 21,243 சந்தேக நபர்களைக் கொண்டதாக முழுக் கைதிகளின் எண்ணிக்கை 30,883 ஆக காணப்பட்டது. இவ்வெண்ணிக்கையினைக் குறைப்பதற்காக பகுப்பாய்வாளர் அறிக்கை துரிதமாக வழங்கப்படுவதனூடாக சிறைக்கைதிகளுக்கு அவர்களது சிறந்த நடத்தையின்படி தண்டனைக் காலத்தினைத் தளர்த்துதல் மேற்கொள்ளப்படும். 2023 ஆம் ஆண்டில் சிறைக்கைதிகள் விடுதலை செய்வது தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

தொடர் இல.	தண்டனை தளர்த்தப்பட்ட முறை	விடுதலை பெற்ற எண்ணிக்கை
1.	உரிமப்பத்திரம் மீது விடுதலை செய்தல்	126
2.	வீட்டு விடுமுறையில் அனுப்புதல்	262
3.	நன்னடத்தை அடிப்படையில் விடுதலை செய்தல்	200
4.	விசேட தினங்களில் கைதிகளை விடுதலை செய்தல்	4,114
	மொத்தம்	**4,702**

சிறைச்சாலையில் வைப்பதனை விட சமுதாய சீர்திருத்த மற்றும் புனர்வாழ்வுக்குட்படுத்துவது சிறைச்சாலை நெரிசலை குறைப்பதற்கான முக்கிய தீர்வாக அமையும். சமுதாயஞ்சார் திணைக்களத்தினால் 2023 ஆம் ஆண்டில் சமுதாய சீர்திருத்த கட்டளையினை அமுல்படுதுவதனுடன் தொடர்பான விவரம் பின்வருமாறு.

வருடம்	பெற்றுக் கொண்ட கட்டளைகளின் எண்ணிக்கை	நிறைவேற்றிய கட்டளைகளின் எண்ணிக்கை	கட்டளை மீறல்களின் எண்ணிக்கை
2023	14,026	5,369	1,441
முன்னைய வருடங்களில் பெற்றுக் கொண்ட கட்டளைகளை உரிய சந்தர்ப்பத்தில் நிறைவேற்ற முடியாமல் 2023 ஆம் வருடத்திற்கு தொடர்ச்சியாக வந்த கட்டளைகள் தொடர்பான விபரம்.	6,485	3,115	2,030
மொத்தம்	**20,511**	**8,484**	**3,471**

போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்கள் புனர்வாழ்வளிப்புக்கு புனர்வாழ்வளிப்புப் பணியகமானது கந்தகாடு, சேனபுர மற்றும் வவுனியாவிலுள்ள புனர்வாழ்வு நிலையங்களை பராமரித்து வருவதுடன் அதன் சென்ற வருட தகவல்கள் பின்வருமாறு.

விபரம்	புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை	சமூகமயப்படுத்தப் பட்டவர்களின் எண்ணிக்கை
ஜனவரி	84	47
பெப்ரவரி	85	57
மார்ச்	90	63
ஏப்ரல்	105	107
மே	84	102
ஜூன்	118	59
ஜூலை	149	93
ஆகஸ்ட்	260	57
செப்டெம்பர்	212	109
ஒப்டோபர்	259	63
நவம்பர்	165	84
டிசெம்பர்	214	85
மொத்தம்	**1,825**	**926**

இலங்கையரும் ஒற்றுமையுடனும் சகவாழ்வுடனும் வாழும் வலிமையான, நிலையான அமைதியை விரும்பும் ஒரு தேசத்திற்கான பின்னணியை உருவாக்குவதற்கு தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவு, தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம், காணமல்போனோர் ஆட்கள் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் ஆகியவற்றுடன் இணைந்து செயற்படும். ஓரங்கட்டப்பட்ட பாடசாலை மாணவர்களை வலுவூட்டுவதற்கு அமுல்படுத்திய நிகழ்ச்சிகள் பின்வருமாறு.

தொடர் இல	செயல்ப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்	செயல்ப்படுத்தப்பட்ட செயல்முறைகள்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீ தொகை(ரூ)
01	ஓரங்கட்டப்பட்ட பாடசாலை சிறுவர்களை வலுப்படுத்தல்	வறுமையால் அவதியுறும், பெற்றோரை இழந்த அல்லது ஒற்றை பெற்றோரை உடைய சிறுவர்களுக்கா பாடசாலை உபகரணங்கள் வழங்குதல்	21	பாடசாலை மாணவர்கள் 2,170	**7,284,392.00**
02	வசதிகள் குறைவான பாடசாலைகளுக்கு உபகரணங்கள் வழங்குதல்	• புத்தக அலுமாரிகள், தொடர்பு சாதனங்களை வழங்குதல், தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குதல், மேசைகள், கதிரைகள் வழங்குதல் மற்றும் நூலக வசதிகளை வழங்குதல், பாடசாலை பௌதீக வளங்களை வழங்குதல்	04 பாடசாலைகள்		**698,100.00**
முழுத் தொகை			**25**		**7,982,492.00**

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மற்றும் பெண்கள் தலைமைத்துவம் வகிக்கும் குடும்பங்களின் பொருளாதார வலுவூட்டலுக்கென 372 பயனாளிகளுக்காக 120 கருத்திட்டங்களை செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும் வடக்கு கிழக்கில் பெண் தலைமைத்துவம் வகிக்கும் குடும்பங்களின் பொருளாதார வலுவூட்டலுக்கு 59 கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. கிராம அலுவலர் பிரிவுகளில் நல்லிணக்க சங்கங்கங்களின் எண்ணிக்கை 10,013 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக திருகோணமலை மற்றும் மட்டக்களப்புப் பிரதேசங்களில் நடமாடும் சேவை நடாத்தப்பட்டதுடன், மேலும் 1250 க்கும் மேற்பட்ட சேவைப் பயனாளிகளுக்கு சேவை அளிக்கப்பட்டது. அவ்வாறே நுவரெலியா,மாத்தளை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலும் நடமாடும் சேவை நடாத்தப்பட்டதுடன், குறைந்த வருமானம் பெறும் 20,000 இற்கு அதிகமானோருக்கு சேவையளிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகள் முற்றிலும் வெளிநாட்டு உதவிகளை நல்கும் நிறுவனங்களின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலக சட்டத்தினை நிறைவேற்றிக்கொள்ள முடிந்தமை அந்த நிறுவனத்தின் மேலதிக நடவடிக்கைகளுக்கு மிகச் சிறந்த சூழ்நிலையை உருவாக்கியது. அத்துடன் காணமல்போனவர்கள் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்த முடியுமானதுடன், 2023 ஆம் ஆண்டிற்குள் 5,210 விசாரணைகளை மேற்கொள்ள இயலுமானமை விசேட தனித்துவமான வெற்றியாகும். இழப்பீட்டுக்கான அலுவலகத்தினால் 3,455 குடும்பங்களுக்கு 1,334.5 மில்லியன் ரூபா நிதி உதவியை வழங்கியதுடன் உளவியல் சமூக நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டு அவ்வாறே பின்தங்கிய குடும்பங்களுக்காக பொருளாதார அடிப்படையில் வலுவூட்டுவதற்காக இழப்பீட்டுக்கான அலுவலகத்தினால் பிரதான வாழ்வாதார கருத்திட்டங்கள் நான்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கற்திற்கான அலுவலகத்தினால் நல்லிணக்கம் மற்றும் கல்வி மற்றும் நல்லிணக்கத்திற்கான கலை மற்றும் கலாசாரம் மோதலை மாற்றும் நிகழ்ச்சிகள் மற்றும் பல கருத்திட்டங்கள் 2023 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

நீதித்துறையை மேம்படுத்தி பொதுமக்களுக்கு மிகச் சிறந்த சேவையை நல்குவதற்கு நீதி அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்பான திணைக்களங்களது உத்தியோகத்தர்கள் 2023 ஆம் ஆண்டினுள் ஆற்றிய பங்கை பாராட்டுகின்றேன். நீதியமைச்சில் முக்கிய பங்காற்றுவதற்கு தலைமைத்துவத்தையும் வழிகாட்டலையும் வழங்கிய கௌரவ அமைச்சர் சனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ அவர்களையும் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி அனுராதா ஜயரத்ன அவர்களையும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

ஒப்பம்/
எம்.என். ரணசிங்க
செயலாளர்
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு.

அத்தியாயம் 03 – வருடத்திற்கான மொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகை கூற்று

தலைப்பு –110

2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

எச்சு- எப்

(ரூபா)

திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2023		குறிப்பு	உண்மை நிலை 2023	2022
-	வருமானப் பெறுகைகள்			
-	வருமான வரி	1	-	-
-	உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-
-	வரிமில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-
-	வருமானமற்ற பெறுகைகள்		-	-
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		2,581,631,859	2,308,512,574
-	வலைப்புகள்		134,964,775	77,197,356
-	முற்பணக் கணக்குகள்		44,621,794	36,086,465
-	ஏனைய மீதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		2,761,218,428	2,421,796,395
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		2,761,218,428	2,421,796,395
-	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		35,106,325	-
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		2,726,112,103	2,421,796,395
	கழி : செலவினம்			
-	மீண்டுவரும் செலவினம்			
719,525,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	655,763,739	556,975,582
1,004,675,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	705,303,005	586,889,202
2,701,850,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	2,380,161,550	1,194,668,007
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-
300,000	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	78,000	85,978
4,426,350,000	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		3,741,306,294	2,338,618,769

		மூலதன செலவினம்		
471,080,000		முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	80,088,051	67,989,494
954,020,000		மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	951,139,582	780,661,158
546,500,000		மூலதன மாற்றல்கள்	12	238,631,522	613,191,364
-		நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-
2,000,000		திறன் விருத்தி	14	1,186,897	1,330,451
642,609,128		ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	170,189,296	1,047,359,198
2,616,209,128		மொத்த மூலதனம் செலவினம் (எ)		**1,441,235,348**	**2,510,531,665**
		வைப்புக் கொடுப்பனவுகள்			
		முற்பணக் கொடுப்பனவுகள்		64,636,249	29,756,169
		ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		49,316,214	45,194,319
		மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		-	-
		மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		**113,952,463**	**74,950,489**
		டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		5,296,494,105	4,924,100,922
				(2,570,382,003)	(2,502,304,527)
		பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி			
-		டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		**(2,570,382,003)**	**(2,502,304,527)**
				-	-

.....

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி : 2024.02.28

எசீஎ- எப்

2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2023		குறிப்பு	உண்மை நிலை 2023	2022
-	**வருமானப் பெறுகைகள்**		-	-
-	வருமான வரி	1	-	-
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		9,329,933,874	8,069,300,000
-	வைப்புகள்		16,763,087,720	11,985,844,103
-	முற்பணக் கணக்குகள்		454,639,060	407,681,024
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**26,547,660,654**	**20,462,825,127**
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		**26,547,660,654**	**20,462,825,127**
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		794,305,253	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		**25,753,355,401**	**20,462,825,127**
	கழி : செலவினம்			
-	**மீண்டுவரும் செலவினம்**		-	-
6,901,477,420.00	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	6,823,928,795	6,834,429,168
2,144,510,000.00	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	2,094,020,111	1,798,903,121
272,375,445.00	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	250,670,241	211,336,947
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-
500,000.00	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	353,256	195,067
9,318,862,865.00	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**9,168,972,403**	**8,844,864,303**

	மூலதன செலவினம்			
691,012,580.00	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	681,580,905	615,031,592
1,213,424,555.00	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	1,137,735,397	1,133,605,614
13,000,000.00	மூலதன மாற்றல்கள்	12	12,750,000	13,600,000
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-
4,700,000.00	திறன் விருத்தி	14	3,903,280	8,913,768
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	-	63,330
1,922,137,135.00	மொத்த மூலதனம் செலவினம் (எ)		**1,835,969,582**	**1,771,214,304**
	வைப்புக் கொடுப்பனவுகள்		17,715,359,323	10,774,914,847
	முற்பணக் கொடுப்பனவுகள்		525,726,383	506,074,208
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		**18,241,085,706**	**11,280,989,055**
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		29,246,027,691	21,897,067,661
11,240,000,000.00	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		**(3,492,672,290)**	**(1,434,242,534)**
	பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி		(3,492,672,290)	(1,434,242,534)
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி			

.....

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி : 2024-09-28

R.M.D.K. Ramanayake
Chief Financial Officer
Ministry of Justice, Prison Affairs
and Constitutional Reforms
Colombo 10.

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

தலைப்பு 110

ஏசீஞ -பீ

2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை	
		2023	2022
		ரூபா	ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஞ-6	4,719,772,680	4,148,831,226
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஞ-5/5ஞ	377,525,279	371,959,028
கூக மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஞ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**5,097,297,958**	**4,520,790,254**
தேறிய சொத்துக்கள்/உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(81,174,464)	(15,540,357)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		4,719,772,680	4,148,831,226
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஞ-5பீ	286,772,495	285,900,663
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஞ-4	171,927,248	101,598,722
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஞ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**5,097,297,958**	**4,520,790,254**

